FTJ

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

**9 - ஆம் வகுப்பு** தமிழ்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** 15 X 1= 15

1. தமிழ் விடு தூது ..................... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தனிப்பாடல் ஆ) காப்பியம் இ) புதுக்கவிதை ஈ) சிற்றிலக்கியம்
2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு என்ன? அ) வினைத்தொகை
ஆ) பண்புத்தொகை இ) உவமைத் தொகை ஈ) தொழிற்பெயர்
3. தீரா இடும்பை தருவது எது? அ) பெருமை, சிறுமை ஆ) நாடாமை, பேணாமை
இ) குணம், குற்றம் ஈ) ஆராயாமை, ஐயப்படுதல்
4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது? அ) ஊரகத் திறனறித் தேர்வு
ஆ) தேசியத் திறனறித் தேர்வு இ) கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
5. தமிழர் சால்பு - என்ற நூலின் ஆசிரியர்
அ) க.ரத்தினம் ஆ) கா..ராஜன் இ) சு.வித்யானந்தன் ஈ) அ.தெட்சிணாமூர்த்தி
6. நான்கறிவு உயிர் எது? அ) எறும்பு ஆ) நத்தை இ) கரையான் ஈ) தும்பி
7. பின்வரும் தொடர்களைப் படித்து "நான்" யார் என்று கண்டுபிடிக்க.
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர். அ) கணினி ஆ) இணையம் இ) தமிழ் ஈ) ஏவுகணை
8. பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர் அ) ஊருணி ஆ) கண்மாய் இ) கூவல் ஈ) கேணி
9. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர் உணர்த்தும் இலக்கணம் அ) தொகை சொற்கள்
ஆ) வேற்றுமை சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) வட சொற்கள்
10. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. இது எவ்வகைத் தொடர்? அ) வினாத்தொடர் ஆ) செய்தித்தொடர் இ) கட்டளைத் தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்
11. திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்
அ) பரிமேலழகர் ஆ) நச்சர் இ) மணக்குடவர் ஈ) பாதிரியார்

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*கரந்துரு எய்திய கடவுளாளரும்*
*பரந்தொருங்கு ஈண்டிய பாடை மாக்களும்*
*ஐம்பெருங்குழுவும் எண்பேர் ஆயமும்*
*வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள்*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) புறநானூறு ஆ) மணிமேகலை இ) பெரியபுராணம் ஈ) தமிழ் விடு தூது
13. குழீஇ - என்பதன் பொருள் அ) ஒன்று கூடி ஆ) குற்றம் இ) மக்கள் ஈ) மன்றம்
14. வந்தொருங்கு - பிரித்து எழுதுக. அ) வந்தது + ஒருங்கு
ஆ) வந்தொ + ஒருங்கு இ) வந்து + ஒருங்கு ஈ) வந்தால் + ஒருங்கு
15. இப்பாடலின் ஆசிரியர் யார்? அ) குடபுலவியனார் ஆ) சேக்கிழார் இ) தொல்காப்பியர் ஈ) சீத்தலைச் சாத்தனார்

## பகுதி - II (மதிப்பெண்கள் 18) பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(21 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.)** 4 X 2 = 8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன.
ஆ) தமிழ்மொழியில் கிடைக்கப் பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும்.
17. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
18. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.
19. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?
20. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
21. தரும் - என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 X 2 = 10

22. பட்டிமண்டபம், பட்டிமன்றம், இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.
23. விரித்த - *பகுபத உறுப்பிலக்கணம் தருக?*



www.Padasalai.Net

24. **சொல்லுக்குள் சொல் தேடுக.** அ) பாய்மரக்கப்பல் ஆ) எட்டுக்கால்பூச்சி
25. **கலைச் சொல்தருக.** i) Missile ii) Tropical Zone
26. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும் – இரண்டு சான்று தருக.
27. பொருள் எழுதித் தொடரமைக்க – வாளை, வாழை
28. சொற்களை இணைத்துத் தொடரை விரிவுபடுத்துக. படம் வரைந்தான்.

பகுதி - III (மதிப்பெண் 18) பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 X 3 = 6

29. ஏறுதழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருக்கிறது?
30. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக் கோளின் பங்கு யாது?
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

உலகம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் உருவாகத் தொடங்கிவிட்டது. அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் நிலத்தடி நீர்வளம் குறைந்து வருகின்றன. உலகச் சுகாதார நிறுவனம் உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

வினாக்கள் : அ) எந்தெந்த நாடுகளில் நிலத்தடி நீர்வளம் குறைந்துள்ளது?
ஆ) உலகச் சுகாதார நிறுவனம் தரும் எச்சரிக்கை யாது?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.(34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6

32. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
33. வினைத்தூய்மை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.
34. "காடெல்லாம்" - எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

பிரிவு - 3


**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 x 3 = 6

35. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. - இக்குறட்பாவில் பயின்று வந்த அணியை விளக்குக.
36. ஏகதேச உருவக அணி குறித்து எழுதுக.
37. பயன்படுத்து, மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக மாற்றுக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 5 = 25

38. அ) வியத்தகு அறிவியல் விரவிக்கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த கருத்துகளைத் தொகுத்துரைக்க. *(அல்லது)*
ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.
39. அ) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. *(அல்லது)* ஆ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய கால்முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்து கருத்துகளைக் கதையாக எழுதுக.



40. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.
41. நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்.
மாநில அளவில் முதலிடம் பெற்றுத் தங்கப்பதக்கம் வென்ற போது ............ .
42. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணைய வழிச் சேவைகள் பற்றி எழுதுக.

பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 8 = 24

43. அ) நீரின்றி அமையாது உலகு என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை சான்றுடன் விவரிக்க. *(அல்லது)* ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றி செய்திகளை விவரிக்க.
44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. *(அல்லது)* ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.
45. அ) குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.
பூஞ்சோலை - சிரிக்கும் மலர்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள். *(அல்லது)*
ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.



www.Padasalai.Net